ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
HUMAN RIGHTS COMMISSION OF SRI LANKA

මගේ අංකය / எனது இல. / My No. }    ඔබේ අංකය / உமது இல. / Your No. }    දිනය / திகதி / Date } 2022-11-29

முறைப்பாட்டாளர் : திரு. த. எமில் நிரோஷன்,
இல. 36, புதிய வன்னியனார் வீதி
மட்டக்களப்பு.

பிரதிவாதிகள்

1. செயலாளர்
முதலமைச்சர் மற்றும் உள்ளூராட்சி கிராம அபிவிருத்தி,
துறைமுக வீதி,
திருகோணமலை.

2. பிரதிப்பிரதம செயலாளர் (நிர்வாகம்)
வன்னியார் வீதி,
வரோதய நகர்,
திருகோணமலை.

3. பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
சரவண வீதி,
கல்லடி, மட்டக்களப்பு.

<u>முறைப்பாட்டு இலக்கம் : **HRC/BCO/042/2016**</u>

முறைப்பாட்டின் சாரம்சம்

முறைப்பாட்டாளர் மட்டக்களப்பு ஏறாவூர்பற்று பிரதேச சபையில் கடந்த 2011.09.01 தொடக்கம் 2013.03.30 வரையான காலப்பகுதியில் தொழில்நுட்பம்சார் மேற்பார்வையாளராக கடமையாற்றியுள்ளார் எனவும் பொது நிர்வாக சுற்றிக்கையின் 25/2014 இன் பிரகாரம் மட்டக்களப்பு பிராந்திய உதவி உள்ளூராட்சி அலுவலகத்தின் வேலையை நிரந்தரமாக்குவதற்கான நேர்முக பரீட்சையில் வேலைகள் மேற்பார்வையாளர் பதவிக்கு 31.03.2015 அன்று நேர்முகத் தேர்வுக்கு தோற்றியதாகவும் எனினும் நேர்முக பரீட்சைக்குழுவினரால் இச்சுற்றுநிருபத்திற்கமைய வேலை மேற்பார்வையாளர் பதவி வழங்க முடியாது எனவும், சிற்றூழியர் சேவை தரத்திற்குள் அடங்கும் பதவிகளுக்கு மாத்திரமே

நிரந்தர நியமனம் வழங்க முடியும் எனக்குறிப்பிட்டதாகவும் மீண்டும் தொலைபேசி அழைப்பின் ஊடாக 04.06.2015 இல் திருகோணமலை உள்ளூராட்சி திணைக்களத்தில் பிற்பகல் 03.00 மணிக்கு நடைபெறும் நேர்முகத்தேர்விற்கு சகல ஆவணங்களுடனும் தோன்றுமாறு பணிக்கப்பட்டதாகவும், அதற்கமைவாக அன்றைய தினம் நடைபெற்ற நேர்முக தேர்விற்கு குறித்த முறைப்பாட்டாளர் சமூகமளித்துள்ளார். நேர்முகப் பரீட்சைக் குழுவினர் ஆவணங்களை பரிசீலித்து அவருக்கு வேலைத்தொழிலாளி தரம் iii பதவிக்கு பரிந்துரைத்து நிரந்த நியமனம் வழங்கினார்கள் எனவும் ஆயினும் தன்னைப்போன்ற வேறு பிரதேச சபைகளில் பணிபுரிந்த ஏனையோருக்கு வேலை மேற்பார்வையாளர் பதவி வழங்கியுள்ளனர் எனவும் மேலும் ஏறாவூர்பற்று பிரதேச சபை சிற்றூழியர் அல்லாதவர்களுக்கு பாலர் பாடசாலை ஆசிரியர் பதவி வழங்கியமையும் தனக்கு மிகுந்த மன உழைச்சலை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்ததுடன் தனது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

**பிரதிவாதிகளின் கூற்று**

மேற்படி முறைப்பாட்டாளர் ஒப்பந்த அடிப்படையில் 01.09.2011 தொடக்கம் 24.03.2015 வரை நெல்சிப் திட்டத்தின் கீழ் வேலைகள் மேற்பார்வையாளராக பணிபுரிந்தார். பின்னர் அரசாங்க சுற்றிக்கை 25/2014 இற்கமைய தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்பட்டார். ஆயினும் வேலை மேற்பார்வையாளர் ஆளனி செங்கலடி பிரதேச செயலகத்தில் இல்லாத காரணத்தினால் சிற்றூழியர்களுக்கான நேர்முகப் பரீட்சை இடம்பெற்றதாகவும், நேர்முக பரீட்சையின் போதே அவ்விடயம் முறைப்பாட்டாளருக்கு அறிவிக்கப்பட்டதென்றும், பிரதிவாதியான பிரதேச சபையின் செயலாளர் ஆணைக்குழு முன் தெரிவித்தார். மேலும் குறித்த முறைப்பாட்டாளர் நேர்முக தேர்வின் போது சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையிலேயே அவருக்கு வேலைத் தொழிலாளருக்கான பதவி வழங்கப்பட்டதாகவும் தெரிவித்திருந்தார்.

**அவதானிப்புக்கள்**

24.08.2011 திகதிய EP/14/BT/ACLG/PL/05/R. Inventory/11 இலக்க கடிதத்தின் மூலமாக உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களுக்கு அனுப்பிவைத்த கடிதத்திற்கு அமைய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மட்டக்களப்பு 01.02.2011 திகதிய EP/14/D3/NELSIP/Gen/01/2011 கடிதத்தின் ஊடாக சகல பிரதேச செயலாளர்களுக்கும் Road Inventory Preparation இற்கு NCT அல்லது Draftsman சித்தியடைந்துள்ள தகுதியான பயிலுனர்கள் பிரதேசத்தில் இருப்பின் அவர்களை தெரிவுசெய்து அவர்களுக்குரிய மாதாந்த கொடுப்பனவை பிரதேச சபையின் மூலம் வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய ஏறாவூர்பற்று பிரதேச சபை – செங்கலடி வீதி அளத்தல் நடவடிக்கைகளுக்காக NCT மாணவர்கள் இருவரை தெரிவு செய்து அவர்களின் சபைத் தீர்மானங்களின் அடிப்படையில் தொழில்நுட்ப உதவியாளர் ஒப்பந்த அடிப்படையில் எனக்குறிப்பிடப்பட்டு நியமனம் வழங்கப்பட்டது. அந்த நியமனத்திற்குள் முறைப்பாட்டாளரும் உள்வாங்கப்பட்டுள்ளார். இவ் நியமனமானது மாதா மாதம் பிரதேச சபை தீர்மானத்திற்கமைய நீடிக்கப்பட்டு வந்துள்ளது.

குறித்த பிரதேச சபை செயலளர் திருமதி. K. ஜோன்பிள்ளையினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையில் குறித்த நியமனத்தின் போது ஆளனிக்குரிய நியமனம் இல்லாமையினால் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட வேலையாட்கள் விபரத்தில் முறைப்பாட்டாளர் அவர்கள் மேற்பார்வையாளர் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த நியமனம் பிரதேச சபை தவிசாளரினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் குறித்த பிரதேச சபையினால் சம்பளமும் வழங்கப்பட்டது.

கிழக்கு மாகாண பிரதம செயலாளரின் 16.03.2015 திகதிய EP/01/Budget proposal/2015 க்கு அமைய விபரங்களை பரிசீலனை செய்யும் பொருட்டு நேர்முகப் பரீட்சைக்கு 30.03.2015/31.03.2018 அன்று பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரினால் மு.ப. 10.30 க்கு முறைப்பாட்டாளர் அழைக்கப்பட்டு கடிதம் அனுப்பப்பட்டது. இக் கடிதத்தில் Mr. T.E Nirosan, Works Supervisor என்றே தலைப்பு இடப்பட்டுள்ளமையையும் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. அதில் பின்வரும் ஆவணங்கள் கோரப்பட்டது.

1. தேசிய அடையாள அட்டை
2. நியமனக் கடிதம் (ஆரம்பத்திலிருந்து இன்றுவரை)
3. கல்விச் சான்றிதழ்
4. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
5. 24.10.2014 ஆம் திகதி 180 நாட்கள் பூர்த்தி செய்ததை உறுதிப்படுத்தும் திணைக்களத் தலைவரின் சான்றிதழ்
6. 2013,2014 ஆம் ஆண்டுகளுக்கான வரவுத்தாள் (பொது 226 அ)

அரசாங்க நிர்வாக மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 25/2014 இலக்க 2014.11.12 திகதியின் பிரகாரம் மேற்குறிப்பிட்ட தகைமைகளை பூர்த்தி செய்திருப்பின் தற்போது கடமையில் ஈடுபட்டு வருகின்ற உத்தியோகத்தர்களுக்கு 24.10.2014 ஆம் திகதியிலிருந்து நிரந்தர நியமனம் வழங்குவதற்காக 2015 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சுற்றுநிருபத்தின் 2 பந்தியின் பிரகாரம் 180 நாட்கள் பூர்த்தி செய்யப்படும் தொழிலாளிகளுக்கு நியமனம் வழங்கலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த முறைப்பாட்டாளர் 2014.10.24ம் திகதிக்கு முன்னர் 180 நாட்கள் திருப்திகரமாக பூர்த்தி செய்துள்ளார் என ஏறாவூர்பற்று பிரதேச சபை செயலாளர் திருமதி கே.ஜோன்பிள்ளை 30.03.2015 திகதிய EP/PS/ET/180D/2015/20 இலக்க கடிதத்தின் மூலம் உறுதிப்படுத்தியுள்ளார்.

சுற்றுநிருபத்தின் 3 பந்தியின்படி சுற்றுநிருபத்தின் 2ஆம் பந்தியில் (ஈ), (உ), (ஊ) மற்றும் (எ) என்பதன்கீழ் வரும் சேவைத் தொகுதியின் உத்தியோகத்தர்கள் மொழி அல்லது இலக்கியம் மற்றும் கணிதம் உட்பட ஆகக்குறைந்தது 6 பாடங்களில் க.பொ.த சா/த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இதற்கமைய முறைப்பாட்டாளர் 2000 ஆம் ஆண்டு க.பொ.த சா/த சுட்டிலக்கம் 24959162 அமைய தோற்றி சமயம் C, தமிழ் மொழி D, விஞ்ஞானம் C, சமூகவியல் கற்கை D, கணிதம் C, வணிகக்கல்வி C, ஆங்கிலம் S, சித்திரம்

D போன்ற பெறுபேறுகளை பெற்றுள்ளார். எனவே சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித்தகைமைக்கு மேலதிகமான பெறுபேற்றை முறைப்பாட்டாளர் பெற்றுள்ளார்.

அத்துடன் நேர்முகப் பரீட்சையில் சமர்பிக்கப்பட்ட 2013,2014 ஆம் ஆண்டுகளுக்கான வரவுத்தாள்கள் (பொது 226 அ) ஏறாவூர்பற்று பிரதேச சபை செயலளாரினால் உறுதிப்படுத்தப்பட்டு வழங்கப்பட்டுள்ளதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற நேர்முக பரீட்சையில் உள்ளடக்கப்பட்ட நேர்முக பரீட்சைக்குழுவில் திருமதி. கமலாவதி பத்மராஜா தவிசாளாராகவும், திரு. கே. சித்திரவேல், திரு. S.M றியாஸ், திரு. A.R. எடிசன், திரு. A.B குமுதினி அன்டன் ஆகியோர் அங்கத்தவர்களாகவும் இருந்துள்ளனர். அவர்கள் முன்னிலையில் தகைமைகள் பரிசீலிக்கப்பட்டு அவர்களால் முறைப்பாட்டாளருக்கு வேலைத் தொழிலாளி-III (தேர்ச்சியற்ற) எனும் பதவிக்கு சிபாரிசு செய்யப்பட்டிருந்தது.

கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி மற்றும் உள்ளூராட்சி சுற்றாடல் அமைச்சின் செயலாளரினால் 15.06.2015 திகதியிடப்பட்ட EPC/CMS/ADM/PS/APPPT/104 இலக்க நியமனக் கடிதத்திற்கு அமைவாக முறைப்பாட்டாளருக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்ற அலுவலக பணிப்பாளர் சேவையில் ஆரம்ப நிலை (தேர்ச்சியற்ற) வேலைத்தொழிலாளி தரம் iii அமைய ஏறாவூர்பற்று பிரதேச சபையில் நியமிக்கப்பட்டார். சம்பள அளவுத்திட்டமாக பொ.நிசு.06/2006 (iv) இற்கு அமைய இருந்தது. கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் 29.02.2016 திகதிய EP/14/ES/Minor Grade Appointment/2016 இலக்க கடிதத்தின் மூலம் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்த அறிக்கையின் படி நிரந்த நியமனம் வழங்குவது தொடர்பான நடவடிக்கைகள் அனைத்தும் கிழக்குமாகாண பிரதம செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டதுடன், குறிப்பிட்ட முறைப்பாட்டாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சை சபையின் வேலைத்தொழிலாளி தரம் iii இற்கு நியமனம் வழங்குவதற்கு சிபாரிசு செய்யப்பட்டிருந்தார்.

Scavengine Adhoc Labours Check 2011 இல் முறைப்பாட்டாளர் பதவி "தொழிலாளி" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும் ஏறாவூர்பற்று பிரதேச சபையின் தவிசாளர் அல்லது செயலாளரால் மாதா மாதம் அனுமதியளிக்கப்பட்டு நாளொன்றுக்கு ரூபா 600/= கொடுப்பனவு வழங்கப்பட்டது. இதற்கமைய 600 x 30 நாட்கள் =18000/= என்பதனால் 06/2006 (iv) சுற்றுநிருபத்தின் கீழுள்ள சம்பள அளவுத்திட்டத்திற்கமைய முறைப்பாட்டாளர் பெற்றுக்கொண்ட சம்பளமானது U-MN 1 முகாமைத்துவ உதவியாளர் - தொழிநுட்பம் சாராத எனும் வகுதியினுள் உள்ளடங்குகின்றமை அவதானிக்கத்தக்கது.

மட்டக்களப்பு பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளரினால் 29.06.2018 BT/ACLG/HRC/2016 இவ் அறிக்கையின் சம்பளப்பட்டியலில் வேலைத்தொழிலாளி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் சம்பளப்பட்டியலில் தொழிலாளி என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும், கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 09.07.2018 திகதிய EP/14/ES/Minor Grade Appointment/HRC இலக்க கடிதத்தில் முறைப்பாட்டாளர் பெற்ற சம்பளப்பட்டியலில் தொழிலாளி பதவிக்கே சம்பளத்தை பெற்றுள்ளார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே அவருக்கு வேலைத் தொழிலாளி பதவி சிபாரிசு செய்யப்பட்டதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் EP/14/TA/B இலக்க நிதியுதவி திட்ட நியமனக் கடிதத்தில் 06/2006 (iv) பிரகாரம் ரூபா 500/= வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய ரூபா 500 x 30 நாட்கள் =18000/= என்பதனால் 06/2006 (iv) சுற்றுநிருபத்தின் கீழுள்ள சம்பள அளவுத்திட்டத்திற்கமைய சம்பளமானது U-MN 1 முகாமைத்துவ உதவியாளர் - தொழிநுட்பம் சாராத எனும் வகுதியினுள் உள்ளடங்குகின்றது. இருப்பினும் முறைப்பாட்டாளர் பெற்றுக்கொண்ட சம்பளமானது இதைவிட அதிகமாகவுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

முடிவு

EP/PS/TA/2011 எனும் நியமனக் கடிதத்தில் வேலைத் தலைப்பு குறிப்பிடப்படாமல் “தாங்கள் நாளாந்தம் மேற்கொள்ளும் வேலைகள் பிரதேச சபையின் தொழிநுட்ப உத்தியோகத்தரினால் மேற்பார்வை செய்யப்படும்” என்றே கூறப்பட்டுள்ளது. இருப்பினும் சபைத்தீர்மானம் 09 இல், “வீதி அளத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள தொழிநுட்ப உதவியாளர்களின்..” என்பதாகக் கூறப்பட்டுள்ளது. ஆகவே, முறைப்பாட்டாளர் செய்த வேலை சபைத் தீர்மானம் அடிப்படையில் நீடிக்கப்பட்டுள்ளது. மேலும் வீதிகளை அளந்து, வரைபடமாக்குதல் போன்றன தொழிநுட்பம் சார்ந்த வேலைகள் என்பதனால் முறைப்பாட்டாளர் தொழிநுட்ப உதவியாளர் வேலையினையே புரிந்துள்ளார். இது அவரின் தற்போதைய நியமன ரீதியிலான கடமைப் பட்டடியலுக்கு (List of Duty) அப்பாற்பட்ட வேலைகள் என்பது புலனாகிறது. எவ்வாறிருப்பினும் அவருக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்த சம்பளம் சிற்றூழியர் தரத்திற்கானதாகும். மேலும் அரசின் விசேட சுற்றுநிருபத்திற்கமைவாகவே நியமனங்கள் வழங்கப் பணிக்கப்பட்டிருந்தும் நேர்முக தேர்வு சிபாரிசு குழு முறைப்பாட்டாளரின் விடயத்தை உரியமுறையில் பகுப்பாய்வு செய்யவில்லை என்பது புலனாகின்றது. மேலும் முறைப்பாட்டாளரின் நியாயமான எதிர்பார்ப்பும் (Legitimate expectation) நிறைவேற்றப்படவில்லை. எனவே குறித்த முறைப்பாட்டாளரின் அடிப்டை உரிமை உறுப்புரை 12(1) மீறப்பட்டுள்ளது.

சிபாரிசு

2014.11.12 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 25/2014 இற்கமைய முறைப்பாட்டாளர் வேண்டப்பட்ட தகைமைகளை பூர்த்தி செய்துள்ளமையினாலும் தொழிநுட்பம் சார் வேலைத் தொகுதியிற்கு கல்வித் தகைமைகளுடன் தகுதியுடையவராக இருப்பதனாலும், நிரப்படுத்தப்படாத அதே வேலையினை தொடர்ச்சியாக குறித்த அலுவலகத்தில் சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் செய்து வந்துள்ளார் என்பதும் எண்பிக்கப்பட்டுள்ள காரணத்தினால், இது 1978ம் ஆண்டின் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின்

அரசியல் அமைப்பின் அத்தியாயம் IIIல் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமையின் உறுப்புரை 12 யின்படி, சட்டத்தின் முன் யாவரும் சமம் மற்றும் சட்டத்தினால் யாவரும் சமமாகப் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் மீறல் நிகழ்ந்துள்ளமையினால் தொழிநுட்பம் சார் வேலைத் தொகுதியிற்குள் அடங்கும்பதவியினையோ அல்லது அதற்கு சமாந்திரமானதும் பொருத்தமானதுமான பதவியை மனுதாரருக்கு வழங்குமாறு சிபாரிசு செய்யப்படுகின்றது.

அத்துடன் உள்ளூராட்சி சபைகள் ஆளனியினரை தெரிவு செய்ய முறையாக ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நியதிகளை அமைத்து, எதிர்காலத்தில் நேர்முகப்பரீட்சை செய்கின்ற போது வெளிப்படைத் தன்மையினை பேணுவதனூடாக சகலருக்கும் உரிமைகள் மீறப்படாத சமமான வாய்ப்புகள் கிடைக்கப் பெறுவதை உறுதி செய்ய சகல உள்ளூராட்சி அதிகார அமைப்புக்களும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

2022. 12 . 30 ஆம் திகதிக்கு முன்னர் அவ் சிபாரிசினை நிறைவேற்றி அதன் அறிக்கையினை ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்குமாறு 1996 ஆம் ஆண்டின் 21 இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்கழுச்சட்டத்தின் பிரிவு 15(7) அமைவாக பிரதிவாதிக்கு அறிவுறுத்தப்படுகின்றது.

அதேவேளை குறித்த சிபாரிசு நடைமுறைப்படுத்தப்பட்டமை அல்லது நடைமுறைப்படுத்தப்படாமை தொடர்பில் மேற்குறிப்பிட்ட தினத்திலிருந்து ஒரு வாரத்தினுள் ஆணைக்குழுவிற்கு அறியத்தருவதுடன், அத்திகதியிலோ அல்லது அத்திகதிக்கு முன்னதாகவோ சம்பந்தமான அறிவுறுத்தலை மேற்கொள்ளவில்லையாயின் அதன் பின்னர் சமர்பிக்கப்படும் வேண்டுகோள்கள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது என்பதையும் மேலும் அறியத்தருகின்றோம்.

A. Shanmuganathan

............................................
செல்வி. அனுசுயா சண்முகநாதன்
ஆணையாளர்

Ms. Anusuya Shanmuganathan
Commissioner
Human Rights Commissioner of Sri Lanka

............................................
வைத்தியகலாநிதி எம். எச். நிமால் கருனாசிறி
ஆணையாளர்

Dr. M.H. Nimal Karunasiri
Commissioner
Human Rights Commission of Sri Lanka

பிரதி:- ஆளுநர்
கிழக்கு மாகாணம்
கீழ் வீதி, ஒசில்ஸ்
திருகோணமலை